# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | OS.69 of 2021 | **PW - 1** | **:** | Cross |
| **Name** | மாரி (எ) மாரியப்பன் | **Father Name** | **:** | சுப்பிரமணி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 05.11.2025 administered by District Munsif, Uthangarai.

துவக்க நேரம் - 02.45 PM

<u>2,4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

(7) தாவா சர்வே எண்.19/3 நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு தெரியாது. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு மூல ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை. எனக்கு கிரையம் கொடுத்தவர்கள் மூல ஆவணங்களை எனக்கு கொடுத்தார்களா என்றால் கொடுத்துள்ளனர். எனது கிரைய பத்திரத்தில் மூல ஆவணங்கள் குறித்து குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளதா என்றால் கூறப்பட்டுள்ளது. நான் கிரையம் வாங்கும் சமயத்தில் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் கிருஷ்ணன் மற்றும் ஆறுமுகம் பெயரில் இருந்தது. அந்த பட்டாவை என்னிடம் ஒப்படைத்துனரா என்றால் ஒப்படைத்தனர். அந்த பட்டாவில் 46 செண்ட்தான் விஸ்தீரணம் போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல 56 சென்ட் போடப்பட்டிருந்தது. அந்த பட்டாவை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளனா என்றால் இல்லை. கிரைய ஆவணத்தில் 56 சென்ட் நிலம் எழுதப்பட்டுள்ளதால் எனக்கு 56 சென்ட் பட்டா கொடுத்தனர் என்று சொன்னால் சரிதான். நான் கிரையம் பெற்ற பின்பு வட்டாட்சியரிடம் மனு கொடுத்து தாவா சொத்தை அளவீடு செய்ய கேட்டேனா என்றால் மனு கொடுத்தேன்.

(8) அந்த மனுவிற்கு பின்னிட்டு பிரதிவாதிகள் சொத்தை அளவீடு செய்யக்கூடாது என்று வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்தனரா என்றால் கொடுத்தனர். அதற்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அவ்வாறு நான் எந்த பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண் 19/3 -க்கு தெற்கு புறத்தில் 19/4 என்ற நிலம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்ட்டு உள்ளதா என்றால் உள்ளது. நான் கிரையம் வாங்கிய நிலத்திற்கு கிழக்கில் ரோடும் மற்ற மூன்று திசையிலும் பிரதிவாதிகளின் நிலமும் உள்ளது என்று சொன்னால் சரிதான். சர்வே

எண். 19/4 எவ்வளவு விஸ்தீரணம் என்று தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண் 19/4 -ல் தான் 2 மற்றும் 4 பிரதிவாதிகள் வீடு கட்டி குடியிருந்து வருகின்றனர் என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தில் எத்தனை ஆண்டு காலமாக குடியிருந்து வருகின்றனர் என்று சொன்னால் எனக்கு தெரியாது. என்னுடைய நிலத்திற்கு தெற்கில் ஒரு வண்டி வழி பாதை செல்கிறதா என்றால் செல்கிறது. அவை 2 மற்றும் 4பிரதிவாதிகள் ரோட்டில் இருந்து அவர்கள் நிலத்திற்கு செல்வதற்காக பயன்படுத்தி வருகின்றனர் என்று சொன்னால் சரிதான்.

(9) சர்வே எண். 19/4 பட்டாவானது பிரதிவாதிகள் பெயரில் தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். 2-ஆம் பிரதிவாதி பதிலுரையுடன் தாக்கல் செய்துள்ள புகைப்படங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அந்த வழி நீண்ட காலமாக உள்ளது அதில் தான் பிரதிவாதிகள் சென்று வருகின்றனர் என்று சொன்னால் சரிதான். அந்த வழியானது சர்வே எண். 19 /4 -ல் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தில் வண்டி வழி பாதைக்கு வடக்கு என்று செக்குப்பந்தி குறிப்பிட்டு வாங்கியுள்ளேனா என்றால் குறிப்பிட்டு தான் வாங்கி உள்ளேன். நான் 12.03.2007 தேதியில் கிரையம் வாங்கினேனா என்றால் இல்லை 12.03.2008 தேதியில்தான் கிரயம் வாங்கினேன். நான் சொல்வது தவறு நான் 12.03.2007 இல் தான் கிரையம் வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல நான் 2007 இல் வாங்கினேன் ஆனால் எனக்கு 2008 இல் தான் கிரையம் கொடுத்தனர். நான் கிரையம் வாங்கிய சமயத்தில் என்னுடைய கிரைய ஆவணத்தில் அரசு புறம்போக்கு நிலத்திற்கு மேற்கே நடராஜன் நிலத்திற்கு கிழக்கும் வடக்கும் தெற்கும் என்று செக்குப்பந்தியை குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னாலும் வண்டி வழி பாதையை செக் பந்தியாக குறிப்பிடவில்லை என்று சொன்னாலும் சரிதான். எந்த தேதியில் நான் சொத்தை அளவீடு செய்தேன் என்றால் 2006 ஆம் ஆண்டிலேயே அளவீடு செய்தேன். அவ்வாறு அளவீடு செய்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

(10) எனக்கு கிரையம் கொடுத்த ஆறுமுகம், கிருஷ்ணன் ஆகியோருக்கு 46 சென்ட் நிலம் தான் பாத்தியம் நான் 56 சென்ட் நிலத்தை கிரயம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய பின் கிரைய பத்திரத்தின் அடிப்படையில் 56 சென்ட் நிலத்திற்கு பட்டா வாங்கியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய பின் வண்டி வழி பாதையை அழிக்க முயற்சித்ததால் தான் பிரதிவாதிகள் அதை தடை செய்தனர் என்று சொன்னால்

சரியல்ல. அதனால் தாவாவில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல எனக்கு பாத்தியப்பட்ட 46 செண்ட் நிலத்தில் பிரதிவாதிகள் எந்த இடையூறும் எப்போதும் செய்வதில்லை அது குறித்து பிரதிவாதிகளுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் நியமிக்க கோரி நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது அதன் பெயரில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது எனக்கு தெரியவில்லை. பிரதிவாதிகள் பெயரில் தவறான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் அதனால் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.

**முடிவு நேரம் – 03.15 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-XXXXX

District Munsif(FAC),
Uthangarai.